1995 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 183, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

183—

ஆத்தூர் அரசு மருத்துவமனையில் ஜெனரேட்டரைப் பழுதுபார்த்தல்

***21276—**திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவிலுள்ள ஜெனரேட்டரை பழுதுபார்க்கவும், பழுதுபட்ட மின்இணைப்புகளை சரி செய்யவும் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆத்தூர் அரசு மருத்துவமனையில் உள்ள 2 கிலோ வாட் ஜெனரேட்டர் பழுதுபார்க்கப்பட்டு 9-12-1993 முதல் செயல்பட்டு வருகிறது.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இவ்வளவு விரைவாக ஜெனரேட்டர் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்காக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்கிற பேரறிஞர் அண்ணா சொன்ன பொன் மொழிக்கு ஏற்ப ஏழை எளிய மக்கள் வசிக்கும் கிராமப்புறத்திற்கு புரட்சித் தலைவி இலவச மருத்துவ முகாம், பள்ளியின் மாணவ மாணவியர்களுக்கு புரட்சித் தலைவி இலவச மருத்துவ முகாம்களை சிறப்பாக நடத்தியுள்ளவர் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள். ஆத்தூர் நகரமானது சேலத்திற்கு அடுத்து பெரிய நகரமாக இருக்கிறது. மேலும், கோவை, பெரியார் மாவட்டங்களுக்கு லாரிகள், பஸ்கள், கார்கள் ஆகிய வாகனங்கள் எல்லாம் அதிகமாக பல நூற்றுக்கணக்கில் செல்வதால், ஆத்தூர் வழியாகத்தான் செல்கின்றன. அங்கே மேலும் ஒரு அவசர விபத்துப் பிரிவும், மற்றும் ஒரு ஆம்புலன்சும் இந்த மருத்துவ மனை பெற அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெனரேட்டர் சம்பந்தப்பட்ட விளக்கம் என்னிடத்திலே இருக்கிறது. மற்ற வசதிகளைப் பொறுத்தவரை, அரசு நிதிநிலைமைக்கேற்ப

நடவடிக்கை எடுக்க முடியும். எனவே, அதற்குத் தனியாக ஆய்வு செய்து பதில் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 184, திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை, அவருக்கு பதிலாக திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

184—

வடசென்னையில் லாரிகள் போக்குவரத்தை முறைப்படுத்துதல்

***9302—**திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னையில் லாரிகள் போக்குவரத்தினால் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் அங்குள்ள சாலைகளில் செல்வதற்கு சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், லாரிகள் போக்குவரத்தை முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்;

(ஆ) இப்பொழுது சென்னை நகரின் மத்தியிலுள்ள கொத்தவால் சாவடியை நகருக்கு வெளியே கோயம்பேட்டில் அமைக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் செயல்படும்போது லாரி போக்குவரத்து நெரிசல் குறையும். சரக்கு வாகனங்கள் நகரின் உட்புறத்திற்கு வருவதைக் குறைப்பதற்கென நகருக்கு வெளியே மாதவரம் பீர்க்கங்கரணை ஆகிய இடங்களில் சரக்கு வாகனங்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னையில் அதிகமான அளவில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. குறிப்பாக அசோக் லேலாண்டு, எண்ணூர் ஃபவுண்டரி, இ.டி.பி.எஸ்., எம்.எப்.எல்., எம்.ஆர்.எல்., என்பீல்ட், போன்ற பெரிய பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால், தொழிற்சாலைகளுக்கு